குறித்து, மாநிலங்களுக்காக, இத்தகையதொரு சட்டத்தை இயற்ற நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்பதாலும்;

1944 ஆம் ஆண்டு பொதுக் கடன் சட்டம், மத்திய மற்றும் மாநில அரசுகளின் சார்பாக இந்திய ரிசர்வ் வங்கி திரட்டும் கடன்களுக்குப் பொருந்தக் கூடியது என்பதாலும்;

இந்திய ரிசர்வ் வங்கி, அரசுப் பிணையங்களைப் பெற்றிருப்பவர்களுக்குத் திறமையான மேம்பட்ட சேவை அளிப்பதற்கு ஏதுவாக, 1944 ஆம் ஆண்டு பொதுக் கடன் சட்டத்தை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாக, 'அரசுப் பிணையங்கள் சட்டம்' என்னும் புதியதொரு சட்டத்தை இயற்றுவது நலமாயிருக்கும் என்று கருதப்படுவதாலும்;

தற்போது, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 252-வது பிரிவைச் சேர்ந்த பகுதி (1)-ன்படி, அரசுப் பிணையங்கள், மற்றும் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் துணையான அல்லது இடைநிகழ்வுகள் அனைத்தையும் சட்டத்தின் மூலம் முறைப்படுத்திட நாடாளுமன்றத்திற்கு அதிகாரமளிக்கலாம் என இப்பேரவை இதனால் தீர்மானிக்கிறது." என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(ஆ) 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கான தமிழ்நாடு சட்டம் 1920-ன் இணைப்புப் பட்டியலில் ஆளுநரால் செய்யப்பட வேண்டிய வரைவுத் திருத்தங்களுக்கு ஒப்புதல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்த அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கான (தமிழ்நாடு சட்டம் V-1920) IV ஆம் இணைப்புப் பட்டியலின் பகுதி-1 என்பதில் 11 ஆம் மற்றும் 28 ஆம் விதிகளை விட்டுவிடுகின்ற, 12 ஆம் விதியை மாற்றியமைக்கின்ற மற்றும் 26-B எனும் விதியைப் புகுத்துகின்ற மேற்சொன்ன சட்டத்தின் 305 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி தமிழ்நாடு ஆளுநரால் செய்யப்பட வேண்டியுள்ள பின்வரும் வரைவுத் திருத்தங்களுக்கு மேற்சொன்ன சட்டத்தின் 305-A எனும் பிரிவினால் கோரப்படுகின்றவாறு ஒப்புதலளிக்கப்படுகிறது"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

வரைவுத் திருத்தங்கள்

1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கான (தமிழ்நாடு சட்டம் V-1920) IV ஆம் இணைப்புப் பட்டியலில் பகுதி-L என்பதன்கீழ்,-

(i) *11* ஆம் விதி விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(ii) *12* ஆம் விதியில் "*9, 10* அல்லது *11*" என்றிருக்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, "*9* அல்லது *10*" என்னும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(iii) *26*-A எனும் விதிக்குப் பின்பு, பின்வரும் விதி புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

"*26*-B வரி விதிப்பு மேல் முறையீட்டுக் குழுவினால் எடுக்கப்படும் முடிவினை எதிர்த்துச் செய்து கொள்ளப்படும் மேல்முறையீடு எதுவும், சம்மந்தப்பட்ட மாவட்ட நீதிமன்றத்தில் வரிவிதிப்பு மேல்முறையீட்டுக் குழுவின் ஆணை பெறப்பட்டுள்ள தேதியிலிருந்து முப்பது நாள் கால அளவுக்குள்ளாக தாக்கல் செய்து கொள்ளப்படலாம்"; மற்றும்

(iv) *28* ஆம் விதி விட்டுவிடப்படுதல் வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

1999 மே 18] [பேரவைத் துணைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

11. தனி நபர் தீர்மானம்

தனியார் துறை பேருந்து நிறுவனத் தொழிலாளர்கள் மத்திய, மாநில அரசுகள் இயற்றியுள்ள சட்டங்களின் பயன்களைப் பெற முழுமையான செயல்முறை நடவடிக்கைகளைப் பரிந்துரைக்க முத்தரப்புக் குழு அமைக்கக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தனி நபர் தீர்மானம், மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. சுப்பராயன்.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"தமிழகத்தில் உள்ள தனியார் துறை பேருந்து நிறுவனங்களில் பணியாற்றும் சுமார் 40,000 தொழிலாளிகள் மத்திய, மாநில அரசுகள் இயற்றியுள்ள சட்டங்களின் பயன்களைப் பெற முடியாத வண்ணம் பேருந்து நிருவாகங்களால் தடுக்கப்பட்டு வருகின்றனர். இச்சட்டங்கள் தனியார் துறை பேருந்து நிறுவனங்களில் செயல்முறைப்படுத்தாத நிலை தொடர்ந்து நிலவி வருகிறது.

எனவே, தனியார் துறை பேருந்து நிறுவனங்களில் இச்சட்டங்களை முறையாக செயல்முறைக்குக் கொண்டு வருவதற்குரிய நடவடிக்கைகளை முழுமையாக ஆய்வு செய்து அரசுக்குப் பரிந்துரைக்க முத்தரப்புக் குழு ஒன்றினை இம்மாநில அரசு நியமிக்க வேண்டும் என்று இப்பேரவை கோருகிறது"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. நா. பெரியசாமி: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. சுப்பராயன் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கே. சுப்பராயன்.